**செய்தி வெளியீடு எண்:229** **நாள்: 24.04.2017**

<u>செய்தி வெளியீடு</u>

**பிரதம மந்திரியின் 2016–17 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு காப்பீட்டு இழப்பீட்டுத் தொகைக்கான ஆணைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி துவக்கி வைத்தார்.**

தமிழக விவசாயிகளின் நலனில் அதிகக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியினை உருவாக்கி, இந்திய அளவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

- கூட்டுறவு வங்கிகளில் கடந்த 31.03.2016 அன்று நிலுவையிலிருந்த 12,02,075 சிறு குறு விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன், நடுத்தரக் கால வேளாண் சார்ந்த கடன், பண்ணை சார்ந்த நீண்ட கால கடன்கள் ரூ.5,318.73 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வடகிழக்கு பருவமழை 62 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளதால், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன.

- இதனால், 1426ஆம் பசலி ஆண்டிற்கான நிலவரி முழுவதும் தமிழ்நாடு அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

- கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் விவசாயிகள் பெற்ற குறுகிய கால பயிர்க்கடன்கள் மத்திய கால கடன்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- டெல்டா விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கில் குறுவை சாகுபடியினை மேற்கொள்ள **ரூ.54.65 கோடி செலவில் குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டத்தை** தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. இதன் விளைவாக **3.16 லட்சம் ஏக்கர் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு 1,37,314 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.**
- மேட்டூர் அணையில் நீர் இல்லாததால், நேரடி நெல் விதைப்பு முறையை ஊக்குவிக்கும் வகையில், **ரூ.64.30 கோடி நிதி செலவில் "சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை"** தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. இதனால் சென்ற

ஆண்டில் சம்பா பருவத்தில், **9.56 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு, 2,79,449 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.**

- வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக ரூ.2247 கோடி நிதியை அறிவித்து, விவசாயிகளின் வங்கிக்கணக்கில் குறைந்த கால இடைவெளியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- வறட்சி காரணமாக, வேலைவாய்ப்பின்றி பாதிக்கப்பட்ட வேளாண் தொழிலாளர்களுக்கு, வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் வகையில், 100 நாட்கள் பணி வரம்பானது, 150 நாட்களாக உயர்த்தப்பட்டது.
- 2017–18ஆம் நிதியாண்டில் ரூ7,000 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- ரூ. 802 கோடி செலவில் நீடித்த மானாவாரி வேளாண்மை சாகுபடி திட்டம் 2016–17 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்பு வேளாண்மை தொழிலுக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது. விவசாயிகளின் நலனில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் தேவையை நன்கு அறிந்து, இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்புகளை காப்பீடு செய்ய உகந்த வேளாண் காப்பீட்டுத் திட்டங்களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தி வருகிறது.

கடந்த 2011–2012 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு அரசால் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் தென்னை மரக் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன.

காரீப் 2016 பருவம் முதல், சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “**பிரதம மந்திரியின் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம்**” செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சுமார் **32 லட்சத்து 24 ஆயிரம் ஏக்கரில்** வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்த **15 லட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள்** பதிவு செய்துள்ளனர்.

2016 – 2017ஆம் ஆண்டில், **பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டு கட்டணம் மானியமாக இதுவரை, 412 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசின் பங்காக காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் தற்போது நிலவிவரும் அசாதாரண வறட்சி நிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில் உடனடியாக காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையினை வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு காப்பீட்டு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியது. இதன் பேரில், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டு இழப்பீட்டு தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் இன்று துவக்கி வைக்கப்பட்டது.

அதன்படி, 30 விவசாயிகளுக்கு, ஐசிஐசிஐ லொம்பார்டு நிறுவனம், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் மற்றும் இந்திய வேளாண் காப்பீட்டு கழகத்தின் மூலமாக காப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்குவதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.4.2017) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

பயிர் அறுவடை பரிசோதனைகள் மற்றும் மகசூல் இழப்பு கணக்கீடு தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில், பயிர் காப்பீடு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீடு இழப்பீட்டு தொகை படிப்படியாக வழங்கப்படும். விவசாயிகளின் வங்கிக் கணக்கில் காப்பீட்டு நிறுவனங்களால் நேரடியாக மின்னணு பணப் பரிமாற்றம் மூலம் இழப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்படும். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயிர்க் காப்பீட்டு திட்டத்திற்கான இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட பயிர்க் காப்பீட்டு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கிட அறிவுறுத்துமாறு 23.4.2017 அன்று புதுடில்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தி உள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9**